# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)

**1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்
2025 ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[37 ஆம் சட்டமூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவாகும் -

(அ) 2023 ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடக்கம் 2025 ஒற்றோபர் 1 ஆம் தேதி வரையான காலப்பகுதிக்கு மட்டும் ஏற்புடையற்பாலதான பத்து சதவீதத்திலான மொத்தச் சேகரிப்பை மட்டுப்படுத்துவதாகும்;

(ஆ) 2025 ஒற்றோபர் 1 ஆம் தேதியிலிருந்து குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலில் அல்லது சூதாட்டத் தொழிலில் ஈடுபடும் ஆட்களிடமிருந்தான மொத்தச் சேகரிப்பு அறவீட்டை பதினெட்டு சதவீதமாக அதிகரித்தலாகும்; அத்துடன்

(இ) இலங்கைப் பிரசைகளாகவுள்ள ஆட்களிடமிருந்து கெசினோ நுழைவு அறவீடானது நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்தலாகும்.

ச.வ.-ஓ 13/2025

## 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயர்**

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்**

**2.** 2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்படவாறானதும் (இச்சட்டத்தில், “முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் பிரிவு 2 இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “பத்து சதவீதத்திலான அறவீடு; ஒன்று, அல்லது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2023 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால், 2025, ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற

PL 15482 - 280 (2025/10)

ஏதேனும் ஆண்டுக்குப் பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று, அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈ) 2025, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பதினெட்டு சதவீதத்திலான அறவீடு ஒன்று." ;

(2) அப்பிரிவின் (1அஅ) என்னும் உட்பிரிவின் பந்தி (ஆ) இல் "ஐம்பது ஐக்கிய அமெரிக்க டொலர்கள்" எனும் சொற்களுக்கு பதிலாக "நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.